508 டி-528/22

| | |
|---|---|
| முதல்வர் | ரா. பாரதி 30/03/23 |
| மு.நே.உ. | |
| பொருளாளர் | |
| கண்காணிப்பாளர் நி | 30/3/2023 |
| கண்காணிப்பாளர் க | 30/3/2023 |

பாலிடெக்னிக் 30 MAR 2023 செவ்வாப்பேட்டை

பதிவுத் தபால்

**தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்**

அனுப்புபவர்: திருமதி. இரா. லலிதா , இ.ஆ.ப., தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்

---

செயல்முறை ஆணை எண். 26688/டி3/2022, நாள்:27.03.2023

பொருள்: நிர்வாகம் – தொழில்நுட்பக் கல்வித் இயக்ககம் – அழகப்ப செட்டியார் அரசு பொறியியற் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, காரைக்குடி – (லேட்).திரு.தே.சந்திரன், ஆய்வக உதவியாளரின்(தெ.நி) வாரிசுதாரர் (மகன்) திரு.ச.கோபிநாத், என்பவருக்கு கருணை அடிப்படையில் திருவள்ளூர், செவ்வாப்பேட்டை, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் வழங்கியது – பணிவரன்முறைப்படுத்தி அரசாணை வழங்கப்பட்டது – இயக்குநர் நிலையில் பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: அரசாணை (3ப) எண்.1 உயர்கல்வித் (சி2) துறை, நாள் 27.02.2023.

---

பார்வையில் காணும் அரசாணையில், திருவள்ளூர், செவ்வாப்பேட்டை, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டு, இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.ச.கோபிநாத், என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில், அவர் பணியில் சேர்ந்த நாளான 18.07.2022 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது. (அரசாணை இணைக்கப்படுகிறது)

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 சட்டப்பிரிவு 28 (1)–ன்கீழ், அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 18.07.2022 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணைகள் வழங்கப்படுகின்றன.

தனியர், பணியில் சேர்ந்த நாள் முதல், மூன்றாண்டு பணிகாலத்திற்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவத்தை நிறைவு செய்ய வேண்டும். மேலும், தகுதிகாண்பருவகாலத்திற்குள் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும்.

இணைப்பு: பார்வையில் காணும் அரசாணை (அசல்)

ஒம்/– இரா. லலிதா
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்

பெறுநர்
திரு.ச.கோபிநாத்,
இளநிலை உதவியாளர்,
அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில்,
செவ்வாப்பேட்டை, திருவள்ளூர் (முதல்வர் வழியாக)

நகல் :
முதல்வர்
அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில்,
செவ்வாப்பேட்டை, திருவள்ளூர்.

தனியரின் 10ஆம் வகுப்பு அசல் மதிப்பெண் சான்றிதழ் (Cer.no.2098157) இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. அதனைப் பெற்றுக்கொண்டதற்கான ஏற்பளிப்பினை உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

டி3/ தொகுப்பு கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

28/3/2023
உதவி இயக்குநர் (நிர்வாகம்)
28.03.2023

D3

சுருக்கம்

தொழில்நுட்பக் கல்வி – காரைக்குடி, அழகப்பா செட்டியார் அரசு பொறியியற் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் தெரிவு நிலை ஆய்வக உதவியாளராக பணியாற்றிய திரு.தே.சந்திரன், பணியிடை மரணமடைந்ததையடுத்து அவரது வாரிசுதாரர் (மகன்) திரு.ச.கோபிநாத். என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

உயர்கல்வி (சி2) த் துறை

அரசாணை (3 ப) எண்.1 நாள்: 27.02.2023.

சுபகிருது வருடம், மாசி – 15.

திருவள்ளுவர் ஆண்டு 2054.

படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் செயல்முறை ஆணை எண். 46027/டி3/ 2021, நாள். 26.6.2022
3. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடிதம் எண். 26688/டி3/2022, நாள். 17.10.2022.

----

ஆணை:-

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடிதத்தில், தொழில்நுட்பக் கல்வித் துறையில் காரைக்குடி, அழகப்பா செட்டியார் அரசு பொறியியற் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் (தெரிவு நிலை) ஆய்வக உதவியாளராக பணியாற்றிய திரு. தே. சந்திரன், என்பவர் பணியிலிருக்கும் போது 21.03.2021 அன்று பணியிடை மரணமடைந்துவிட்டதால், அவரது மனைவி திருமதி. விஜயலெட்சுமி. என்பவர் தனது மகன் திரு. ச. கோபிநாத் என்பவருக்கு

...2...

கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 15.07.2021 அன்று விண்ணப்பித்தார் என்றும், அதனைத் தொடர்ந்து கருணை அடிப்படையில் பணி நியமனம் குறித்து மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையால் வெளியிடப்பட்டுள்ள அரசாணையின்படி அவரது விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டது என்றும், தனியர் எஸ்.எஸ்.எல்.சி படிப்பை மார்ச் - 2005-ல் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும் அன்னாரின் பிறந்த தேதி 20.01.1989 ஆகும் என்றும் தெரிவித்து திரு. ச. கோபிநாத் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்படுவதற்கான கல்வித் தகுதி, வயது மற்றும் 3 ஆண்டுகளில் விண்ணப்பம் அளித்தல் ஆகிய தகுதிகளை பூர்த்தி செய்திருந்ததால், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறை ஆணையின்படி பணி நியமன ஆணை வழங்கப்பட்டது என்றும் தெரிவித்து, திரு. ச. கோபிநாத், தொழில் நுட்பக் கல்வித் துறையில் திருவள்ளூர், செவ்வாய்பேட்டை, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் 18.07.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார் எனவும், இளநிலை உதவியாளர் பதவி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வரம்பிற்குட்பட்டதால் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டுள்ள திரு. ச. கோபிநாத் என்பவரின் பணியினை, அவர் பணியில் சேர்ந்த நாளான 18.07.2022 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி தக்க அரசாணையினை வழங்கும்படி அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேற்கண்ட தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கருத்துருவானது அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. தொழில்நுட்பக் கல்வித் துறையில் காரைக்குடி, அழகப்பா செட்டியார் அரசு பொறியியற் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் தெரிவுநிலை ஆய்வக உதவியாளராக பணியாற்றிய திரு.தே. சந்திரன் என்பவர் 21.03.2021 அன்று பணியிடை மரணமடைந்ததை அடுத்து கருணை அடிப்படையில் திருவள்ளூர், செவ்வாய்பேட்டை, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டுள்ள அவரது வாரிசுதாரரான (மகன்) திரு.ச.கோபிநாத் என்பவர் அப்பதவியில் பணியில் சேர்ந்த நாளான 18.07.2022 முற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்கு தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன்

...3...

பணிவரன்முறை செய்ய அரசு முடிவெடுத்து, அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால் அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் பெற விதிகளின்படி தகுதி உடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.18050/ட்டி1/2022, நாள்.07.12.2022 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அ.சா.எண்.4141091/ஜி1/2023, நாள்.21.02.2023-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா. கார்த்திகேயன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை – 600 025.
முதல்வர், அழகப்பா செட்டியார் அரசு பொறியியற்
மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, காரைக்குடி.
(தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் வழியாக)
திரு.ச. கோபிநாத், அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி,
செவ்வாப்பேட்டை, திருவள்ளூர்.
(தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் வழியாக)

<u>நகல்</u>
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலர்,
உயர்கல்வித் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

27/2/2023

பிரிவு அலுவலர்.

27/2/2023